முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசு அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களின் இருபதாண்டுகாலக் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில், பழைய ஓய்வூதிய திட்டத்தின் பலன்களை வழங்கக்கூடிய புதிய திட்டமான "தமிழ்நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தைச் (Tamil Nadu Assured Pension Scheme TAPS) செயல்படுத்திட ஆணையிட்டதையொட்டி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (4.1.2026) ஜாக்டோ-ஜியோ, தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த நிர்வாகிகள் சந்தித்து நன்றி தெரிவித்த நிகழ்வில், அவர்களுக்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் இனிப்புகளை ஊட்டி மகிழ்ந்தார்.

ஆலந்தூர் தொகுதி நந்தம்பாக்கம் பகுதிக்குட்பட்ட அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த தகவல் தொழில்நுட்ப அணி பகுதி செயலாளர் சந்தோஷ்குமார் மற்றும் அருண் ஆகியோர் தலைமையில் 50-க்கும் மேற்பட்ட இளைஞர்கள் காஞ்சிபுரம் வடக்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் முன்னிலையில் தி.மு.கழகத்தில் இணைந்தனர். அருகில் மாமன்ற உறுப்பினர் பாரதி வெங்கடேசன், மாவட்ட வர்த்தக அணி துணைச் செயலாளர் குமரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தமிழ் மின் நூலகத்தில்

ஜி.டி.நாயுடுவின் சிறப்பு இணையப் பக்கம் தொடக்கம்!

அமைச்சர் – முனைவர். பழனிவேல் தியாகராஜன் தகவல்!

சென்னை,ஜன.5-

தமிழ்நாடு முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, ஜி.டி. நாயுடு அவர்களின் ஆவணங்கள் மின்பதிப்பாக்கம் செய்யப்பட்டு, தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையின் கீழ் இயங்கி வரும் தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் மின் நூலகத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, "தமிழ் நாட்டு அறிவியலாளர் ஜி.டி. நாயுடு" என்னும் பெயரில் உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு இணையப் பக்கத்தை (https://tamildigitallibrary.in/gdn), அன்னாரது நினைவு நாளான ஜனவரி 4 இன்று, தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தொடங்கி வைத்தார்.

பன்முக ஆளுமை ஜி.டி. நாயுடு, அரிய நூல்கள் அடங்கிய பெரிய நூலகம் ஒன்றைப் பராமரித்துவந்தார். அவருடைய தொகுப்பிலிருந்து 30 ஆயிரம் புத்தகங்களை அந்நாளைய கோவை நகரமன்றத்திற்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். பொதுவிழாக்களில் கலந்துகொண்டபோது, தம்முடைய உரையைச் சிறுநூலாக அச்சடித்து அவையினருக்குக் கொடுப்பது அவரது வழக்கம். அப்படியான அவரது எழுத்துகளையும் சிந்தனைகளையும் தாங்கிய கட்டுரைகள், வாழ்க்கை வரலாறுகள், அவர் பதிப்பித்த, அவர் வாசிப்புக்காகச் சேகரித்த நூல்கள், இதழ்கள், புகைப்படங்கள் ஆகியவற்றை உள்ளடக்கமாகக் கொண்ட அரும்பெரும் இணையப் பக்கம் இது.

"ஜி.டி.நாயுடுவின் அறிவைச் சமுதாயம் முழு அளவில் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்றாலும், எதிர்காலத்தில் நம்முடைய சந்ததியருக்கு, அவருடைய கண்டுபிடிப்பும் அறிவும் பெரும்கருவூலங்களாக அமையும்" என அறிஞர் அண்ணா கூறியதைத் தமிழ் நாடு அரசு அவருடைய சிந்தனைகளைக் கருவூலமாக்கி ஓர் அரிய காலப்பேழையை வெளியிட்டு நனவாக்கியுள்ளது.

"தமிழ்நாட்டு அறிவியலாளர் ஜி.டி. நாயுடு" சிறப்பு இணையப் பக்க உருவாக்கத்தில் பங்குவகித்த அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் தமிழ்நாடு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் வாழ்த்துகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துள்ளார்.

அறிவைப் பொதுமை செய்வோம் என்னும் நோக்கத்தில் செயல்படும் தமிழ் மின் நூலகத்தின் இந்தச் சிறப்பு இணையப் பக்கம் தமிழ்கூறும் நல்லுலகுக்கு மேலும் ஒரு நல்வரவு.

இந்நிகழ்வில் கோமகன், இயக்குநர் (பொ.), செல்வ புவியரசன், உதவி இயக்குநர், சித்தானை, திட்ட அலுவலர் உள்ளிட்ட தமிழ் இணையக் கல்விக்கழக அலுவலர்கள் பங்கேற்றனர். மேலும், ஜி.டி. நாயுடு அறக்கட்டளை தலைவர் கோபால், அறங்காவலர்கள் ராஜ்குமார், திருமதி அகிலா, ஜி.டி. அருங்காட்சியகத்தின் பொது மேலாளர் சுரேஷ், நூலகர் திருமதி. சங்கீதா மற்றும் ரமேஷ்குமார், தலைவர், புகைப்பட ஆவணக் காப்பகம், புதுச்சேரி பிரெஞ்சு நிறுவனம், உள்ளிட்டோர் காணொலி வாயிலாக கலந்து கொண்டனர்.

நீண்ட நாள் கோரிக்கையான

தமிழ்நாடு அரசு ஊழியர்களின் ஓய்வூதிய அறிவிப்பு!

முதல்வருக்கு – வைகோ பாராட்டு!

சென்னை,ஜன.5-

ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு அரசு அலுவலர்களுக்கு முறையான ஓய்வூதியம் வழங்குவது குறித்து தகுந்த பரிந்துரைகள் வழங்க, அரசு கூடுதல் தலைமைச் செயலர் ககன்தீப் சிங் பேடி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது; அந்தக் குழுவும் பரிந்துரை அறிக்கையை அளித்தது.

அதை முழுமையாக ஆராய்ந்து, தமிழ்நாடு அரசு தற்போது சந்தித்து வரும் நெருக்கடியான நிதிச்சூழலில், தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் 'தமிழ்நாடு உறுதியளிப்பு ஓய்வூதியத் திட்டம்' என்ற புதிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பான அறிவிப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று வெளியிட்டு இருப்பது வரவேற்கத்தக்கது. இந்தத் திட்டத்தை அரசு ஊழியர்-ஆசிரியர் சங்கங்களும் வரவேற்றுள்ளன.

"20 ஆண்டு காலம் ஓய்வூதியம் இல்லாத நிலைமைக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது. மேலும், பணிக் கொடை ரூ.25 லட்சம், அகவிலைப் படியுடன் கூடிய ஓய்வூதியம் வழங்க உறுதியளிக்கப்பட்டு இருக்கிறது.

குறைந்தபட்ச ஓய்வூதியம், கருணை அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு மகிழ்ச்சி அளிக்கிறது" என்று ஜாக்டோ-ஜியோ, தலைமைச் செயலக சங்கம், அரசு ஊழியர் சங்கம், தமிழக ஆரம்பப் பள்ளி ஆசிரியர் கூட்டணி, தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றம் உட்பட பல்வேறு அரசு ஊழியர் -ஆசிரியர் சங்கங்களின் நிர்வாகிகள் மகிழ்ச்சி தெரிவித்து முதல்வரையும் சந்தித்து நன்றி தெரிவித்தனர்.

தமிழ்நாடு அரசு இயந்திரம் சிறப்பாக இயங்குவதற்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் வகையில் உறுதி அளிக்கப்பட்ட ஓய்வூதியம் அறிவிப்பு வெளியிட்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சருக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை தென்மேற்கு மாவட்ட

வர்த்தக அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு அறிவிப்பு!

சென்னை ஜன:5

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மயிலை ஆர். பாலு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் வருகின்ற 10.1.2026 சனிக்கிழமை அன்று நடைபெறுகின்ற திராவிட பொங்கல் விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் இன்று (5-1-2026 திங்கட்கிழமை) மாலை 7 மணியளவில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட வர்த்தக அணி நிர்வாகிகள்,மயிலை பகுதி கிழக்கு,மேற்கு,தியாகராயர் நகர் பகுதி கிழக்கு, மேற்கு,பகுதி அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள், தலைவர்,துணைத் தலைவர் மற்றும் அணி நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் மயிலை ஆர்.பாலு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

5 ஜனவரி 2026

தன்னலம் மறந்தோர் மறைவதில்லை! கழகம் அவர்களை மறப்பதில்லை!!

முன்னாள் சென்னை மாநகராட்சி மேயர்

தியாக மறவன் சி.சிட்டிபாபு Ex., M.P. அவர்களின்

49-வது நினைவு நாள்

திராவிட கொள்கை குன்றே!
கழக கொள்கை பரப்பு செயலாளராய்!
மிசாவின் கொடுமையால் உயிர்நீத்த
எனது தந்தையே! தியாக மறவனே!

ஆண்டுகள் கடந்தாலும்! உன் புகழ் ஓங்க! உயர்க!!

தங்கள் ஆட்சியில்...
பாசமிகு கழகத்தலைவர்
ஆட்சியைசையில்...
இளந்தலைவர்
ஆட்சியைசையில்...
கழக ஆட்சி 7-வது முறையாக
அரியணையேற்றிட
அயராது உழைப்போம்...

உன்னை என்றும் மறவா அன்புமகன்

சுகுமார் சிட்டிபாபு B.Com., சேப்பாக்கம்